**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.194/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw8/Pw5 |
| Name | : சுரேஷ்குமார் |
| Father/Husband's Name | : ராமசாமி |
| Village | : மறைமலைநகர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21.07.2026.

**முதல் விசாரணை:**

1. நான் மறைமலைநகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து ஏப்ரல் மாதம் 2026 ல் பணி ஓய்வு பெற்றேன். கடந்த 20.05.2023 ம் தேதி 17.00 மணியளவில் புகார் தாரர் சசிகலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 729/2023 பிரிவு 380 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றை தினமே சம்பவ இடம் சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் சாட்சிகள் லலிதா மற்றும் சங்கரன் ஆகியோர் முன்னிலையில் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் முறையே **அதசா.ஆ. 6 மற்றும் 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சிகள் 1–5 வரையுள்ளவர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.11.2023 ம் தேதி மாலை 16.00

மணியளவில் கீழ்கரணை வில்வம் மருத்துவமனை அருகே பெண் காவலர் உதவியுடன் எதிரியை கைது செய்தேன்.

2. எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் ஏழுமலை மற்றும் சிவா ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 8½ தங்க நகைகளை மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ.8 மற்றும் 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை உரிய பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்றப்பட்ட பொருளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த படிவம் 95 **அதசா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. புகார் தாரர் எத்தனை புகார் கொடுத்தார் என்றால் ஒரே புகார் தான் கொடுத்தார். சம்பவ தேதிக்கும், புகார் கொடுத்த தேதிக்கும் எவ்வளவு நாட்கள் இடைவெளி என்றால் சுமார் 5½ மாதம் காலதாமதமாக புகார் கொடுத்தார். 20.05.2023 ல் சம்பவம் நடந்தது, 28.11.2023 ல் புகார் கொடுத்தார். காலதாமததிற்கான காரணத்தை புகார் தாரர் தெரிவிக்கவில்லை என்றால் எதிரி வாடகை வீட்டை காலி செய்து சென்றுவிட்டதால் தாமதமாக கொடுத்ததாக சொன்னார். அந்த விவரத்தை புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். புகார் தாரருக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட சண்டை குறித்துதான் புகார் கொடுக்கப்பட்டது என்றாலும், காணாமல் போன நகைகளை வைத்து பழிவாங்க வேண்டம் என்ற நோக்கத்தோடு மாற்றி கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் அருண்விஜய் மற்றும் பிரசாந்த் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை.

2. வழக்கு சொத்து அனைத்தும் அருண்விஜய் மற்றும் பிரசாந்த் ஆகியோர்களிடம் இருந்து தான் கைப்பற்றப்பட்டது என்றாலும், எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. புகார் தாரரை தவிர மற்ற சாட்சிகள் அனைவரும் புகார் தாரரின் உறவினர் என்றால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் புகார் தாரரின் உறவினர்கள் என்றாலும், பொய்யான வழக்கு என்பதால் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் புகார் தாரரின் நகைகள் இல்லை என்றால் மாற்று நகை தான் கொடுக்கப்பட்டது. சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகார் பெறவில்லை என்றாலும், சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், சம்பவ இடம் செல்லாமல் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் காவல் நிலையத்தில் வைத்துதயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. புகாரை பெரும் போதே சாட்சிகள் பட்டியலை தயார் செய்துசாட்சிகள் வாக்குமூலத்தை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu